ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர

உ

ஸ்ரீ குருப்யோ நம: ஸத்குரு பாதம் துணை







**அபார கருணா ஸிந்தும் ஞானதம் ஸாந்த ரூபிணம்**
**ஸ்ரீ சந்த்ர சேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம்**

குரு: சிவோ குருர் தேவோ குருர் பந்து சரீரிணாம்
குருராத்மா குருர் ஜீவோ குரோரண்யம் ந வித்யதே !!
இதமேவசிவம் இதமேவசிவம் இதமேவசிவம் இதமேவசிவம்
மமஸுஜனதோ மமஸுஜனதோ மமஸுஜனதோ மமஸுஜன:

- குருகீதை

# ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா ஆராதனை மஹோத்ஸவம்

## அதிருத்ர, சதசண்டி, ருக்ஸம்ஹிதா ஹோமம்

## மஹான் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அதிஷ்டான வளாகம்

### அக்னி க்ஷேத்திரம் திருவண்ணாமலை

### 12-12-2017 முதல் 22-12-2017 வரை

இயற்கை சீற்றங்களால் ஜீவராசிகள் துன்பப்படாமல் இருப்பதற்கும், எங்கும் கிடைக்கப்பெற இயலாத மோன சத்சித் ஆனந்தத்தை குருவருளால் கிடைக்கப்பெற்று சுயம்பிரகாச ஆத்மஜோதியில் நிலைபெற்று பேரானந்தம் என்னும் குருஅருள் அமிர்தத்தை சுகித்து கிடைத்தற்கரிய பூரண மரணமிலா பெருவாழ்வு வாழ்வதற்கும், உலக நன்மைக்காகவும், தருணத்தில் மழை பெய்து நாடு செழிக்கவும், **அதிருத்ர சதசண்டி ருக்ஸம்ஹிதா ஹோமம் அக்னி க்ஷேத்ரமான திருவண்ணாமலையில் ஸ்ரீ ஆதிசங்கர பரம்பராகத மூலாம்னாய ஸர்வக்ஞபீட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் குருநாதனின்** ஸங்கல்பத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நினைத்தாலே முக்தி தருவதும், அதன் மஹிமையை மேலும் உயர்த்தும் விதமாக, மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி ஆகிய இருவரும், திவ்ய ஸ்தூல சரீரத்துள் இருந்து கொண்டு, சுமார் 40 வருஷங்கள் ஒரே சமயத்தில் தவஸீலர்களாக வாழ்ந்து காட்டி, பிறகு ஜீவன்முக்தர்களாக நித்யவாசம் செய்யும் பெருமையுடைத்து **அருணாசலம்.**

பாதாள லிங்கத்தின் மறைவில் சமாதி நிஷ்டையில் இருந்த, அச்சமயம் 'பாலஸ்வாமி' என்று அழைக்கப்பட்ட பகவான் ஸ்ரீ ரமணரை வெளியுலகுக்கு புலப்படுத்தியவர் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்.

"ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் தானாகவே வந்து அனுக்கிரஹிக்கின்றாரே, நீங்கள் ஏன் அப்படி செய்யவில்லையே" என்று ஸ்ரீ ரமணரை சிலர் கேட்டபோது,

"அவர் செய்யும் ஸித்திகளை என்னைப் போன்றவர் செய்ய ஆரம்பித்தால், தவத்திற்கு பங்கம் வந்து அத்துடன் நின்றுவிட வேண்டியதேயொழிய ஆத்மஸாக்ஷாத்காரம் அடையமுடியாது. அவர் கருணையே உருவெடுத்து வந்தவர். அருள் தானாக சுரக்கும், அந்தப் ப்ரக்ஞையின்றியே. அவரால் அநுக்ரஹிக்காமல் இருக்க முடியாது" என்று விளக்கம் அருளினார்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா, காஞ்சிபுரத்தில் ஸ்வாமிகள் அவதரித்த க்ருஹத்தை மிகுந்த ப்ரயாசைக்குப் பின் கண்டுபிடித்ததும், பஜனை நாமாவளியாக,

**"ஜய ஜய ஜய ஜய காமாக்ஷி**
**ஜய ஜய ஜய ஜய காமகோடி**
**ஜய ஜய ஜய ஜய சேஷாத்ரி"**

என்று சொல்லச்சொல்லி உஞ்சவ்ருத்திக்கு ஏற்பாடு செய்து தொடர்ந்து அந்த க்ருஹத்தில் ஆராதனை, ஜெயந்தி உற்சவங்கள் நடத்தியதும், ஸ்ரீ பெரியவாளுக்கு ஸ்வாமிகளின்மேல் இருந்த பக்தியை உணரலாம்.

ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர

Scanned by CamScanner

ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர

ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் பெரிய உருவப் படத்தோடு தேனம்பாக்கம் சென்றேன் தரிசனத்துக்காக. ஸ்ரீ பெரியவா படத்தை உன்னித்து கவனித்துவிட்டு ஸ்வாமிகளைப் போலவே உட்கார்ந்து கொண்டு, “டேய், நான் சேஷாத்ரி ஸ்வாமிகளைப் போல ஆவேனா? அந்த நிலை எனக்கு வருமா?” என்றதும் எந்த மஹானை ஒவ்வொரு கணமும் நான் தெய்வமாக தரிசித்து பரவசப்பட்டுக் கொண்டிருக்கிறேனோ, அந்த பரிபூரணமே ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அடைந்த நிலையை அடைய விரும்புகிறார் என்றால், ஸ்வாமிகள் எந்த நிலையில் இருந்தார் என்பதை இதற்கு மேல் தெளிவாக சொல்ல முடியுமா ?

– **ஸ்ரீ பரணிதரன்**

திருவண்ணாமலையில், யோகியாய், சித்தராய், பித்தராய், உன்மத்தராய் திரிந்து, தற்சமயம் ஸச்சிதானந்த நிரதிசய பரப்ரும்ம ஸ்வரூபமாய் இருந்து அநுக்ரஹித்துக் கொண்டிருக்கின்றார் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்.

இத்தகைய பெருமைமிகு க்ஷேத்திரத்தில் **ஸ்ரீ ஆதிசங்கரரின் மறு அவதாரம்** என்று உலகம் முழுவதும் கொண்டாடுகின்ற **காஞ்சி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளின்** திவ்ய அனுக்ரஹத்துடனும் **காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** அருளாசியுடனும் வரும் **ஹேமலம்ப வருஷம் கார்த்திகை மாதம் 27 ம் தேதி செவ்வாய்க்கிழமை முதல் மார்கழி மாதம் 7 ம் தேதி வெள்ளிக்கிழமை வரை (12.12.2017 முதல் 22.12.2017 வரை) 11 நாட்கள்** தலைசிறந்த வேதவிற்பன்னர்களை கொண்டு நடைபெற உள்ளது.

இத்தகைய பெருமைமிகு க்ஷேத்திரத்தில் நடைபெறும் சிறப்பு வாய்ந்த மாபெரும் யாகத்தை பக்தகோடிகள் நேரில் வந்து தரிசித்து குரு கைங்கர்யத்தில் கலந்துகொண்டு வாழ்வாங்கு வாழுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்**
**கைங்கர்ய டிரஸ்ட்**

## நிகழ்ச்சி நிரல்

**12.12.2017 செவ்வாய்க்கிழமை முதல் 21.12.2017 வியாழக்கிழமை வரை**

| | |
|---|---|
| காலை 4.45 மணி | **கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம்** |
| காலை 7.00 மணி to 12.00 மணி | **மஹாந்யாஸம், ஸ்ரீ ருத்ர ஜபம், ஹோமம் ஸ்ரீ சண்டி பாராயணம், ருக்ஸம்ஹிதா ஹோமம்** |
| மாலை 3.30 மணி to 5.30 மணி | **வித்வத்ஸதஸ், உபன்யாசம், நாமஸங்கீர்த்தனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள்** |
| மாலை 6.00 மணி | **ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம், ஸ்ரீ ருத்ரக்ரமார்ச்சனை, ஸ்ரீ லலிதாசஹஸ்ரநாம அர்ச்சனை, அவதாரிகை தீபாராதனை** |
| **22.12.2017 வெள்ளிக்கிழமை** | |
| காலை 4.45 மணி முதல் | **கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம்** |
| பிற்பகல் 1.00 மணி வரை | **அதிருத்ர சத சண்டி ஹோம பூர்த்தி, ருக்ஸம்ஹிதா ஹோமம் பூர்த்தி, வஸோர்த்தாரை, பூர்ணாஹுதி, கலச அபிஷேகம், தீபாராதனை, ப்ரசாத வினியோகம்** |

குறிப்பு : அதிருத்ர மஹாயாகம் நடைபெறும் அனைத்து நாட்களிலும் **சிறப்பு அன்னதானம் நடைபெறும்.**

இடம் : **ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அதிஷ்டான வளாகம்**
**அக்னி க்ஷேத்திரம் திருவண்ணாமலை**

Scanned by CamScanner